

திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வடக்கு மண்டல வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தந்த கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு வழி நெடுகிலும் கழகத்தினர் – பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் உற்சாக வரவேற்பு அளித்தபோது எடுத்த படம்.

### ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன் தலைமை! வேளாங்கண்ணி பேரூராட்சியில்

# ரூ.48 லட்சத்தில் பள்ளி மற்றும் நியாய விலை கட்டிடம்!

## என்.கௌதமன், ஜானிடாம்வர்கீஸ், நாகைமாலி திறந்து வைத்தனர்!

நாகை. அக்.23-

நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து வேளாங்கண்ணி பேரூராட்சியில் 1984ம் ஆண்டு தொடங்கப்பட்டு 39ஆண்டுகள் சிறப்பாக இயங்கி வரும் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ.33.40 லட்சம் மதிப்பிலான புதிதாக கட்டப்பட்டுள்ள மூன்று வகுப்பறை கட்டங்கள், ரூ.15 லட்சம் மதிப்பில் வேளாங்கண்ணி கடற்கரையில் மீனவ கிராம மக்களுக்காக ரூ.15 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலை கடை கட்டிடட திறப்பு விழா நடைபெற்றது.

ஒன்றிய ஆத்மாகுழு தலைவரும், வேளாங்கண்ணி பேரூராட்சி துணைத்தலைவர் ஆ.தாமஸ் ஆல்வாஎடிசன் தலைமை தாங்கினார். வேளாங்கண்ணி பேரூராட்சி தலைவர் டயானா ஷர்மிளா, கீழையூர் ஒன்றியக் குழுத் தலைவர் செல்வராணி ஞானசேகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆத்தமா குழு உறுப்பினரும், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ் வரவேற்றார்.

புதிய கட்டிடங்களை நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானிடாம்வர்கீஸ், கீழ்வேளூர் சட்ட மன்ற உறுப்பினர் நாகைமாலி ஆகியோர் திறந்து வைத்தனர். நிகழ்ச்சியில் கீழையூர் ஒன்றியக் கழகச் செயலாளரும், வேளாக்கண்ணி பேரூராட்சி துணைத்தலைவர் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், மாவட்ட துணை ஆட்சிர் ரஞ்சித்சிங், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மாவட்டப் பிரதிநிதி மு.ப. ஞானசேகரன், கூட்டுறவு சங்க மண்டல துணைப் பதிவாளர் பன்னீர்செல்வம், கூட்டுறவு சங்க மண்டல துணைப் பதிவாளர் பன்னீர்செல்வம், வேளாங்கண்ணி பேரூர் கழக நிர்வாகிகள் கந்தையன், மரிய சூசைநிக்சன், சார்லஸ். பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் வெற்றிவேல், ஜெயனட்அலக்ஸ், சுமதி பாண்டியன், சித்திரா, தையல்நாயகி, வின்சியா, சத்தியாவிரமணி, சசிரேகா, கவிதா ஒன்றிய பொறியாளர் அணி ஒருங்கணிப்பாளர் ஆனந்த் உள்ளிட்ட ஏரானமானவர்கள் கலந்து கொண்டனர்.




கழக இளைஞர் அணிச் செயலாளரும் – அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் நீட் விலக்கை வலியுறுத்தும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தில் தலைமையேற்று, இந்திய குடியரசுத் தலைவர் அவர்களுக்கு கையெழுத்திட்டு 'நீட் விலக்கு நம் இலக்கு' பெட்டியிலிட்டார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; திராவிட மாடல் ஆட்சியை திராவக மாடல் ஆட்சி என்று குறிப்பிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளாரே; எடப்பாடி பழனிச்சாமி!

**பெரியதம்பி :** **ஆமாம்பா; அம்மா நடத்திய அ.தி.மு.க. ஆட்சி காலத்தில்தானே, ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா, கோட்டைக்குப் போகும் வழியில் பட்டப்பகலிலே அவருடைய முகத்திலே திராவகம் வீசப்பட்டு அது பரபரப்பான செய்தியாக மட்டுமல்ல; அதன் பின்னணி இரகசியங்கள் எல்லாம் பக்கம் பக்கமாக ஏடுகளில் வெளிவந்தனவே !**

**அந்த அளவுக்கு திராவக ஆட்சி மட்டுமல்ல; ஹெராயின், கஞ்சா, குட்கா மாடல் ஆட்சி எல்லாம் நடத்திய ஆட்சியல்லவா அ.தி.மு.க. ஆட்சி. அதனால் தான் எடப்பாடிக்கு எல்லாமே அப்படித் தோன்றுகிறது போலும்!**


